திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழைத் தமிழ்ப் புலவர்களுக்கு எந்த அடிப்படையில் உதவித் தொகை வழங்கப்படுகிறது ? தற்போது வழங்கப்படுகின்ற உதவித் தொகை எவ்வளவு என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே ரூ. 100 தரப்பட்டது. இப்போது அதை உயர்த்தி ரூ. 250 ஆகத் தந்து கொண்டிருக்கிறோம்.

(முற்பகல் 9–50)

திருமதி. பா. வளர்மதி : தலைவர் அவர்களே, ஏழைத் தமிழ்ப் புலவர்களை ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளில் சிறப்பு ஊழியர்களாக நியமித்து அங்கு தமிழைக் கற்றுத் தருவதற்கு அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இங்கே தமிழ் அறிஞர்களாக வறுமையில் வாடுகின்ற புலவர்களுக்கு 58 வயதுக்கு மேற்பட்டவர்கள் என்கின்ற அடிப்படையில் இந்த உதவித் தொகை வழங்கப்படுகிறது. பள்ளிகளில் பாடம் சொல்லித் தருவதற்கு நல்ல இளைஞர்கள் நிறைய பேர்கள், புலவர்கள் இருக்கிறார்கள்.

தனியார் பள்ளிகளில் தமிழ் பயிற்றுமொழி.

726—(*வினா எண் 6571)—திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசின் கல்வி மான்யம் பெறும் தனியார் பள்ளிகள், தாங்கள் நடத்தும் பாடத் திட்டங்களில் 75 சதவீதம் தமிழ் பயிற்சி மொழி வகுப்புகள் நடத்த வேண்டும் என்று உத்தரவிடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இல்லை.

திரு. கு. சுப்பராயன்: தலைவர் அவர்களே, தமிழ் பயிற்று மொழி என்பதைக் கொள்கையாகக் கொண்ட இந்த அரசினுடைய கல்வி மானியத்தைப் பெறுகின்ற தனியார்ப் பள்ளிகளில் தமிழ்ப் பயிற்று மொழி முறை இல்லாமல் இருப்பதால், தமிழ்ப் பயிற்று மொழி இல்லாத பள்ளிகளுக்கு அரசு மானியத்தைக் கொடுக்காது என்று உத்தரவு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் தமிழ் பயிற்று மொழியாக இருக்கிறது. ஆங்கிலம் பயிற்று மொழியாக இருக்கிறது. அதுபோன்று சிறுபான்மை மொழியும் பயிற்று மொழியாக இருக்கின்றது. ஆகவே தமிழ் பயிற்று மொழியாக இருக்கின்ற பள்ளிகளில் மாணவர்கள் தமிழ் படித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆங்கிலம் பயிற்று மொழியாக இருக்கின்ற பள்ளிகளில், தமிழைப் பாட மொழியாக எடுத்துப் படிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது.

திரு. கு. சுப்பராயன்: தலைவர் அவர்களே, தமிழக அரசின் கல்வி மானியத்தைப் பெறுவதற்கு தனியார் பள்ளிகளில் எவ்வளவு சதவீதம் தமிழ் பயிற்று மொழியாக இருக்க வேண்டுமென்று ஏதாவது வரம்பு விதிக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, பயிற்று மொழியாக தமிழ் இருக்க வேண்டுமென்பது நாம் எடுத்துக் கொண்டிருக்கிற முடிவு. புதியதாக யாருக்கும் ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாக நடத்துவதற்கு நாம் அனுமதி தருவதில்லை. அப்படி விரும்புகின்றவர்கள் ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாக வைக்க வேண்டுமென்றால், அவர்கள் மெட்ரிக்குலேஷன் பள்ளிகளாக, அரசினுடைய உதவி இல்லாத பள்ளிகளாக நடத்திக் கொண்டிருக்க வேண்டும்.

முதியோர் கல்வித் திட்டம்.

727—(*வினா எண் 2048)—திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் முதியோர் கல்வித் திட்டத்தில் பயன் அடைவோர் எத்தனை பேர்?

(ஆ) தமிழகத்தில் எத்தனை முதியோர்க் கல்வி மையங்கள் உள்ளன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) 6,93,168 பேர்கள்.

(ஆ) 22,122 மையங்கள்.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முதியோர் கல்வியை கிராமப்புறங்களில் கற்றுத் தருகின்ற முறை சென்னை போன்ற நகர்ப்புறங்களுக்கும் விரிவாக்கப்படுமா என்பதையும், இதிலே எவ்வளவு ஆசிரியர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்கின்ற விவரத்தையும் மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?